JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **61/2017** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.10** | Prosecution /Defence / Court | |
| Name | சந்தோஷ் | Village | வடுகபாளையம் ரோடு, தெக்கலுார் |
| Father's Name | கோபால்சாமி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 19.02.2026**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கோயமுத்துாரில் Textiles தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். சம்பவ சமயத்தில் என்னுடைய தந்தை கோபால்சாமி வடுகபாளையத்தில் சுப்ரீம் COT Mill நடத்தி வந்தார். மேற்படி மில்லில் எலக்ட்ரானிக் Boards காணாமல் போயிருந்தது. அது சம்மந்தமாக நாங்கள் திருப்பூர் அவினாசி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தோம். 08.11.2016ம் தேதி மணி சரி வர நினைவில் இல்லை. கிட்டாம் பாளையம் ரோட்டில் இரண்டு இரு சக்கர வாகனத்தில் வந்த ஆறு பேரையும் பிடித்து கருமத்தம்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார். அதன் பின்னர் என்னிடம் இரண்டு அல்லது மூன்று கையொப்பம் பெற்றது மட்டுமே எனக்கு நினைவில் உள்ளது.

2) ஒப்புதல் வாக்குமூலங்களில் ராஜா (எ) சின்னதம்பி மற்றும் பாண்டி (எ) பாண்டிகுமார் ஆகிய இரு எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். **மேற்படி கையொப்பம் ராஜா (எ) சின்னதம்பியின் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.6 மற்றும் பாண்டி (எ) பாண்டிகுமாரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள**

**இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை வழக்கு சம்மந்தமாக போலீசார் யாரும் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி அ.சா.10 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

1) 08.11.2016ம் தேதி காலை 7.00 மணிக்கு கருமத்தம்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் வாகன தணிக்கையில் கிட்டாம்பாளையம் ஊராட்சி அலுவலகம் அருகில் மேற்கொண்ட போது இரண்டு இருசக்கர வாகனங்களில் வந்த ஆறு நபர்களையும் நிறுத்தி விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. என் முன்னிலையிலும் சந்திரசேகரன் முன்னிலையிலும் விசாரித்து எதிரிகள் பாண்டி (எ) பாண்டிகுமார் மற்றும் ராஜா (எ) சின்னதம்பி ஆகிய இருவரையும் கைது செய்து அவர்கள் இருவரும் தனித்தனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காஞ்சிகோவில், அவினாசி காவல் நிலைய பகுதிகளில் வழிபறி குற்றத்தில் ஈடுபட்டதாக கூறிக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பாண்டி (எ) பாண்டிகுமார் ஆஜர்செய்த TN 38 BF 5076 Bajaj Discover மோட்டார் சைக்கிளை கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல.

2) எதிரி பாண்டி (எ) பாண்டிகுமார் எங்களையும், போலீசாரையும் வாகராயன்பாளையத்திற்கு அழைத்து சென்று முத்தூட் பைனான்ஸ்க்கு பின்புறம் உள்ள பாண்டி (எ) பாண்டிகுமார் வீட்டிற்கு அழைத்து சென்று காஞ்சிகோவில் அருகில் தானும், ராஜா (எ) சின்னதம்பியும் மோட்டார் சைக்கிளில் சென்று வழிபறி செய்த ஆறு பவுன் தங்க தாலி கொடியை மாலை 3.30 மணிக்கு என் முன்னிலையிலும், சந்திரசேகரன் முன்னிலையிலும் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. கருமத்தம்பட்டி, அவினாசி காவல் நிலைய வழக்குகளில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை